# தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

## C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

# மன்னா..

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் யார்

-சங்கீதம்:16:8


*I have set the Lord always before me; because he is at my right hand, I shall not be shaken.*

*Psalm:16:8*

JULY '2022

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| Day / Time | Program |
| --- | --- |
| WED<br>7.30 PM | BIBLE STUDY<br>EVERY WEDNESDAY<br>CONTACT: THE PRESBYTER |
| SAT<br>7.45 PM<br>9.30 PM | 1 ST & 3 RD WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 4TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |




கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.**

**– ரோமர்:8:14**

**FOR ALL WHO ARE LED BY THE SPIRIT OF GOD ARE SONS OF GOD.**

**-ROMANS:8:14**

- ஆண்டவரின் பிள்ளைகள் ஆண்டவரின் தன்மையைப் பெற்றவர்கள். (யோவான்:1:12,13; ரோமர்:8:17).
- ஆண்டவரின் பிள்ளைகள் படைப்பிற்கு வாழ்வளிப்பவர்கள் (ரோமர்:8:9).
- ஆண்டவரின் பிள்ளைகள் பாகுபாடு அற்றவர்கள்.

இப்படிப்பட்ட தன்மைகளைப் உடையவர்களாக ஆண்டவரின் பிள்ளைகளாக வாழ நம்மை அர்ப்பணிக்க தூய ஆவியானவரின் கரங்களில் ஒப்புவிக்க அழைக்கப்படுகிறோம். கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன். தொடர்ந்து இந்த காலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்து அநேகர் இந்த காலகட்டத்தில் வேலைவாய்ப்புகள் இல்லாமல்

பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். வருகின்ற விடுமுறை நாட்கள் நமக்கு பயனுள்ள நாட்களாக பயன்படுத்திக் கொள்வோம் அநேகர் தங்கள் சொந்த இடங்களுக்கு பயணம் செய்ய இருக்கிறார்கள் அவர்களின் சுக பயணத்திற்காக குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

## CHAMPIONS FOR CHRIST -2022

இந்த விடுமுறை நாட்களில் நமது பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்வுக்கு பயனுள்ள நாட்களாக பயன்படுத்திக் கொள்ள நமது திருச்சபையின் வாயிலாக வருகின்ற செப்டம்பர் மாதம் CHILDREN'S BIBLE SCHOOL (CBS)- பிள்ளைகளுக்கு CHAMPIONS FOR CHRIST என்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்ய இருக்கிறோம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற உற்சாக படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அத்துடன் இந்த நிகழ்வுக்காக ஜெபிக்குமாறு அழைக்கப்படுகிறோம். தொடர்ந்து இந்த காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக, அவர்களின் உயர் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்........

Rev.S.P.Baskar

# ஆண்டவரே எல்லாம்

சங்கீதம்:16

**கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் யார் அசைக்கப்படுவதில்லை.**

**-சங்கீதம்:16:8**

**I HAVE SET THE LORD ALWAYS BEFORE ME; BECAUSE HE IS AT MY RIGHT HAND, I SHALL NOT BE SHAKEN.**

**-PSALM:16:8**

## முன்னுரை

இந்த சங்கீதம் "ஆண்டவரே எல்லாம்" என்பதை தாவீது எடுத்துக் காண்பித்திருக்கிறார். இதில் நாம் காணும் உண்மை "நீதி எனக்கு வேண்டாம்; நீதியின் ஆண்டவரே எனக்கு வேண்டும். நிலம் எனக்கு வேண்டாம் நிலத்தில் உரிமை காரரே எனக்கு வேண்டும்" என்று கூறும் ஒரு அறிக்கையின் பாடலாகும் அல்லது "நீ சென்று வேற்றுத் தெய்வங்களை வழிபடு" என்று எதிரிகள் கூறி ஆண்டவருடைய உரிமையில் பங்கு பெறுவதிலிருந்து தாவீதைத் துரத்திவிட்டபோது அவர் பாடிய பாடலாகும். இஸ்ரவேலரில் பலர் பிற தெய்வங்களை பின்பற்றி அவற்றை வழிபட்டபோது கடவுளின் பிள்ளைகள் உண்மைக் கடவுளாகிய ஆண்டவரிடம் மட்டுமே மகிழ்வும் நிறைவான வாழ்வையும் காணமுடியும் என்று விரும்புகிறார்கள் என்பதை இந்த சங்கீதத்தின் வழியாக புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம். இந்த சங்கீதத்தின் பத்தாம் வசனத்தை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சான்றாக பேதுருவும் (அப்:2:25-31) பவுலும் (அப்:13:35) எடுத்துக் காட்டப்படுகிறது. இந்த சங்கீதம் "மறுவாசகம்" என்ற முறையில் ஏற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இது நம்பிக்கை குழுவை சார்ந்த பாடலாகும் இதில் ஆண்டவரே எல்லாம் என்பதை மையமாக சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

### *Psalm:16*

*When the faithful sing Psalm -16, they entrust themselves to the Lord. They experience confidence and contentment in his care. The Psalm uses imagery from Israel's allocation of the land under Joshua (V:5-6) to express contentment in this life. It also looks forward to everlasting life in God's presence (V:9-11).*

### சங்கீதம்:16:1–2: பற்றுறுதியோடு (விசுவாசம்) கூடிய மன்றாட்டு

வசனம்:1,2- "தேவனே என்னைக்காப்பாற்றும் உம்மை நம்பியிருக்கிறேன்" (உம்மையன்றிஎனக்கு இல்லை).

இது அன்றைக்கு இருந்த லேவியருக்கென்று நாட்டிலே ஒரு பகுதி ஒதுக்கப்படவில்லை, ஏனெனில் அவர்கள் ஆண்டவருக்கு உரியவர்கள், அவர்கள் விசுவாசத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவர்கள் (எண்:3:45) இவர்களின் ஜெபம் விசுவாசம் நிறைந்த ஜெபமாக இருந்தது என்பதை எடுத்து காண்பிக்கின்றது.

### சங்கீதம்:16:3–4– பிற தெய்வ வழிபாட்டினரை பின்பற்றாதவர்கள்

வசனம்:3- "பூமியிலுள்ள பரிசுத்தவான்கள்" (தூயோர்).

இது இஸ்ரயேலில் வாழ்ந்த லேவியர்களின் நேர்மையான புனிதமான வாழ்வை வாழ்ந்தவர்களை குறிப்பது ஆகும்.

வசனம்:4- "இரத்த பானபலிகள்".

இது இரத்தக்கரையால் மாசுபட்ட மனிதர் ஒப்புக்கொடுத்த பலிகள் (ஏசாயா:1:15) அல்லது பச்சிளம் குழந்தைகளைக் கொன்று ஒப்புக்கொடுத்த பலிகள் (ஏசாயா:57:5) இவற்றை குறிப்பது ஆகும்.

"அவர்கள் நாமங்களை (பெயரை) என் உதடுகளினால் உச்சரிக்கவும் மாட்டேன்"

பிற தெய்வங்களின் பெயரை உச்சரிக்க வேண்டாம் என்பது கடவுளின் கட்டளையாகும் (யாத்:23:13, ஓசே:2:17) எனவே ஆண்டவர் ஒருவரே என்று பிற தெய்வ வழிபாட்டை பின்பற்றாதவர்கள் பரிசுத்தவான்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது.

## சங்கீதம்:16:5–8 தளராத நம்பிக்கையுடன் எல்லாமே ஆண்டவர் என்று அறிக்கையிடுவோர்கள்.

வசனம்:5- கர்த்தர் என் சுதந்தரமும், என் பாத்திரத்தின் பங்குமாணவர் (ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து- அவரே என் கிண்ணம்)

லேவியர்களுக்கு ஆண்டவர் தம்மையே உரிமை சொத்தாக கொடுத்தார், பங்காக கொடுத்தார் என்று அறிக்கை செய்தார்கள். "ஆண்டவர் கடந்த காலத்தில் என் பாதுகாப்பாய் இருந்தார், நிகழ்காலத்தில் உறுதுணையாய் இருக்கிறார், எதிர்காலத்திலும் என்னை வழிநடத்துவார்" என்றுஆண்டவரே எல்லாம் என்பதை நம்பிக்கையுடன் பாடப்பட்ட பாடலாகும்.

வசனம்:6-“நேர்த்தியான இடங்களில் எனக்கு பங்கு கிடைத்தது”.(இனிமையான நிலங்கள் எனக்குப் பாகமாக கிடைத்தன)

இது ஆண்டவர் தம்மையே லேவியருக்கு கொடையாய்க் கொடுத்ததைக் குறிக்கிறது. ஆண்டவரே லேவியர் உழைத்து பயிரிடும் நிலமாகிறார். ஆண்டவரது பணியே அவர் ஆற்றும் நிலப் பணி ஆகும். எனவே எல்லாமே ஆண்டவர் அவர் எனக்கு பங்குமாணவர் என்று தளராத நம்பிக்கையுடன் பாடப்பட்ட பாடலாகும்.

வசனம்:7- “இராக்காலங்களிலும்” (இரவில் கூட)

இது துன்ப வேலையிலும் எல்லா நிலைகளிலும் ஆண்டவர் என்னோடு இருக்கிறார் என்பதை காண்பிக்கின்றது.

வசனம்:8-“கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்”.

இது ஆண்டவரைப் பற்றி நினைவு எப்போதும் என்னிடம் உள்ளது, அவருடைய கட்டளைகளை பின்பற்றுகிறேன் எனவே அவர் எனக்கு துணையாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறார். எந்த துன்பங்கள் வந்தாலும், நெருக்கடிகள் வந்தாலும் அசைக்கப்படுவதில்லை என்று அறிக்கை செய்யும் பாடலாகும்.

## சங்கீதம்:16:9–11–ஆண்டவரின் ஆசிர்வாதமும்– மகிழ்ச்சியும்

வசனம்:9- "என் இருதயம் பூரித்து, என் மகிமை களி கூர்ந்தது" (என் இதயம் என் உள்ளம் என் உடல்)

இது ஆண்டவர் கொடுத்த வாழ்வில் காணப்படும் மகிழ்ச்சியின் அடையாளமாகும்

வசனம்:10- "என் ஆத்துமாவைப் பாதாளத்தில்விடீர்" (பாதாளம்-படுகுழி)

இந்த சொற்களுக்கு எபிரேயத்தில் இரண்டு சொற்கள் பயன்படுத்தப்படுகிறது "ஹெயோல், ஸகாத்" இதற்கு அழிவு என்று பொருள் கொடுக்கப்படுகிறது. எனவே ஆண்டவரை நம்பி விசுவாசத்துடன் இருப்போரை அழிவிலிருந்து பாதுகாக்கிறார் என்பதைக் குறிக்கிறது.

வசனம்:11- "உம்முடைய சமூகத்தில் பரிபூரணஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு".

இது ஆண்டவர் அளிக்கும் ஆசீர்வாதமான, நிறைவான மகிழ்ச்சியையும் பேரின்பத்தையும் சுட்டிக்காட்டுகிறது. இவற்றை ஆண்டவர் ஒருவரே கொடுப்பார் என்பதை உணர்த்தும் பாடலாகும்.

### நிறைவாக


இன்றைய உலக இன்பங்களும் ஆசைகளும் அறிவுக்கு அழைக்கின்றது. ஆண்டவரை தஞ்சமாக கொள்வதே அவரை ஆண்டவர் என்று அறிக்கை செய்து வாழ்வது நிலையான வாழ்வுக்கும், நிறைவான மகிழ்ச்சிக்கும் நம்மை அழைத்துசெல்லும். எனவே "ஆண்டவரே எல்லாம்" என்று அவரை விசுவாசத்தோடு பின்பற்றி அவருக்கு சாட்சியாய் வாழ அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் உங்கள் ஆயர்

Rev.S.P.Baskar

# இராகாப்



**மத்தேயு: 1:6**

## முன்னுரை

**சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; போவாஸ் ஓபேத் ஈசாயைப் பெற்றான்**

**—மத்தேயு:1:5**

**SALMON THE FATHER OF BOAZ BY RAHAB, AND BOAZ THE FATHER OF OBED BY RUTH OBED THE FATHER OF JESSE.**

**- MATTHEW:1:5**

இராகாப் கடவுளை நேசித்தவர், கடவுள் மீது அதிக நம்பிக்கை கொண்டவர், கடவுளைப் பின்பற்றியவர். எபிரேயர்:11—ஆம் அதிகாரத்தில் விசுவாசிகளின் பட்டியலை வாசிக்கிறோம், இந்த பெயர் பட்டியலில் இராகாப்பின் பெயர் இருப்பதை காணலாம். இதன் மூலம் இவருடைய முக்கியத்துவத்தைக் குறித்து அறிந்துக்கொள்ளலாம். கடவுள் மீது நம்பிக்கை வைத்து மீட்பின் வரலாற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் இராகாப் ஆவார். இராகாப்பின் வாழ்வில் இரண்டு நிலைகளைக் காணலாம், முதலில் தம் வாழ்வின் முதல் பகுதியில் இவர் யாவேவை வணங்காமல் சிலை வணக்கம் செய்துவந்தார். ஆனால்கடவுளை நேசித்தவுடன் உண்மைக் கடவுளை நேசித்து அதிக அன்பு வைத்து விசுவாசத்துடன்/நம்பிக்கையுடன் வாழ்கின்றவராய் மாறுகின்றார்.

"ரா" என்னும் சொல்லுக்கு எகிப்தியர் மத்தியில் வாழ்ந்த அமோரியர் மொழி நடையில் கடவுள் என பொருள்படும். இராகாப் என்னும் முழு பெயருக்கு **"துடுக்கான மூர்க்க மான்"** என்னும் பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால் கடவுளை நேசித்து, கடவுள் மீது நம்பிக்கை வைத்த பின் இவருடைய வாழ்க்கை பயணம் இனிமையாக மாறி யோசுவாவின் ஒற்றர்களுக்கு உதவி செய்கின்றார் (யோசுவா:2:4) இராகாப்பிடம் காணப்பட்ட பண்புகளில் மிகவும் சிறப்பானவை இங்கே குறிப்பிடலாம்.

- ஒற்றர்களை மறைத்து வைக்கும் "கருணை உள்ளம்" இங்கு காணலாம்
- ஒற்றர்களை காப்பாற்ற அவர்களை தேடி வந்தவர்களை வேறு வழியாக அனுப்புவது அவரது "திறமைசாலி" என்பதை காணலாம்
- எல்லாவற்றுக்கும் மேலாக உண்மை கடவுள் மீது அவர் வைத்த "விசுவாசத்தை" இங்கு காணலாம்

இப்படிப்பட்ட நல்ல பண்புகளினால் இவர் மட்டுமல்ல இவரை சார்ந்து இருந்த மக்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டார்கள். இதனால் தான் இயேசு கிறிஸ்துவின் தலைமுறைப் பட்டியலில் இவர் இடம் பெறுகின்றார். தாவீதின் கொள்ளுப்பாட்டியான இராகாப் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் வரலாற்றில் இடம் பெற்றார் என்பதை புரிந்துகொள்ள அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயரம்மா....

*Mrs.E.Nancy Baskar.*





# எதற்கும் கவலை கொள்ளாதே...!

ஒரு ஊரில் வயதான விவசாயி ஒருவர் பல வருடங்களாக வயல்களில் வேலை செய்து வந்தார். இவர் தனது வீட்டில் குதிரை வளர்த்து வந்தார். ஒரு நாள் குதிரை எங்கோ ஓடிவிட்டது. விஷயம் அறிந்த அக்கம்பக்கத்தினர் அவரிடம் சென்று, “என்ன துரதிர்ஷ்டம்!” என்றனர். விவசாயி, “இருக்கலாம்” என்றார். மறுநாள் காலை ஓடிப்போன குதிரை திரும்பி வந்தது. ஆனால் வரும் போது மூன்று குதிரைகளுடன் வந்தது. அதை அறிந்த அக்கம்பக்கத்தினர் அவரிடம் வந்து, “எவ்வளவு அற்புதம்!” என்றனர். மேலும் அவர், "இருக்கலாம்" என்றார்.

மறுநாள் விவசாயியின் மகன் குதிரையில் ஏற விரும்பி குதிரையில் ஏறினான். ஆனால் அந்த குதிரை அவரை கீழே தள்ளியது. அதனால் அவரது கால் உடைந்தது. உடனே அக்கம் பக்கத்தினர் அவரிடம் மீண்டும் அன்பாகப் பேசினர். மேலும் அவர், "இருக்கலாம்" என்றார். மறுநாள் ராணுவ அதிகாரிகள் தனி நபர் விருப்பமில்லாமல் அனைத்து இளைஞர்களையும் ராணுவத்தில் சேர அழைத்துச் சென்றனர். முறிந்த நிலையில் இருந்த வாலிபரை பார்த்து விட்டு சென்றனர். உடனே அக்கம்பக்கத்தினர் அவரிடம் வந்து, “அவர்கள் உங்கள் மகனை விட்டுச் சென்றது என்ன ஒரு பாக்கியம்” என்று வாழ்த்தினார்கள். விவசாயி, “இருக்கலாம்” என்றார்.

MORAL – எதைப் பற்றியும் கவலைப்படாமல், எல்லாமே நன்மைக்கே என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

VERSES – மத்தேயு 6:27கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக

*ARTICLE BY*

**SIS. SHALLU SIMEYON**

WOMEN'S *Fellowship*




# மனுஷனே

**'மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.'**


***(மீகா. 6 : 8)***

*மீகா தீர்க்கதரிசி தேவன் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை இந்த வசனத்தில் சொல்லியிருக்கிறார். நியாயத்தைச் செய்வது என்பது தேவனுடைய வார்த்தையின்படி நாம் ஒவ்வொன்றிலும் செய்வதைக் குறிக்கிறது. நாம் செய்வது எதுவாக இருந்தாலும் அது தேவனுடைய வார்த்தையின்படியானதா என்பதை ஆராய்ந்து செய்யவேண்டும். ஏனென்றால் தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பானது எவ்வளவு நல்லதாகக் காணப்பட்டாலும் தேவன் அதை அங்கீகரிக்கமாட்டார். ஏனென்றால்*




**தேவன் 'தான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்'** - *(மத்தேயு 7 : 24)*

என்று சொல்லியிருக்கிறார். மணலின்மேல் வீட்டைக் கட்டின மனுஷன் எப்படி விவரிக்கப்பட்டிருக்கிறான் பாருங்கள்! ‘ நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன்‘ என்று சொல்லப்படுகிறது. ஆகவே தேவன் சொன்னபடி செய்வதை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். மேலும் நாம் இரக்கத்தை சிநேகிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார். நாமும் தேவனிடத்தில் இரக்கத்தை எதிர்பார்க்கவேண்டும். நாம் மற்றவர்களிடத்திலும் இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் மற்றவர்களிடத்தில் இரக்கமுள்ளவர்களாக இருக்கும்பொழுதுதான் தேவன் நம்மிடத்தில் இரக்கமுள்ளவராக இருப்பார். நாம் மற்றவர்களிடத்தில் இரக்கமில்லாதவர்களாய் இருக்கும் போது, நாம் எப்படி தேவனிடத்தில் இரக்கத்தை எதிர்பார்க்கமுடியும்? நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கு அளக்கப்படும் என்பதை மறவாதீர்கள். அடுத்ததாக நாம் மனத்தாழ்மை உள்ளவர்களாக நடப்பதை தேவன் நம்மிடத்தில் கேட்கிறார். பெருமை தேவனை நம்மைவிட்டு பிரிக்கிறது, தாழ்மை அவரோடு நம்மை இணைக்கிறது.



# THE STRUGGLE WITH UNFORGIVENESS

**EPHESIANS 4:30-32**

All of us have been hurt at one time or another and the offender may well have been someone we love. We often attempt to get past the pain of such situation with comments like. "That's okay" or "Don't worry about it, "and yet we just can't seem to shake that penetrating sting. Why aren't we able to let it go?

One reason that we struggle with unforgiveness is a simple matter of pride. Why don't we forgive?. Because that person hurt ME!" we cry. As a result of our offended pride, the injustice grows much greater than we should allow. It becomes an issue of personal insult rather than an honest mistake or flash of insensitivity.




Another factor in our unforgiveness is bitterness. We become resentful when we refuse to deal honestly with hurt feelings and then allow the matter to fester in our heart. A growing sense of irritation spreads through our spirit like an infection. It has been rightly said that bitterness is like poison that you prepare for someone else and then drink yourself. While it silently destroys our life, the person who hurt us may remain completely unaware of our dark feelings.

Finally, we struggle with unforgiveness because we often have a poor idea of what it is all about. Or, we might be sitting around waiting for an apology that may never come.


If you have been hurt recently, pray for the strength and honesty to approach the offender and say, you did this and it hurt me. But I Love you and refuse to allow this to destroy our relationship."




Article by

**RAVINDRA R. POOJARY**

MEN'S FELLOWSHIP





# அருமை செயலால் அருளாசிப் பெற்ற தொற்காள்

யோப்பா நகரில் வாழ்ந்து வந்தவர் தொற்காள் இவர். இயேசுவின் பெண் சீடர் இவர் கபித்தாள் என்றல் பெயரிலும் அழைக்கப்பட்டார் தொற்காள் என்பதற்கு 'பெண்மான்' என்பது பொருள். நன்மைச் செய்வதிலும், இரக்கச் செயல்கள் செய்வதிலும். அவர் முழுமையாக தன்னை ஈடுபடுத்தி வாழ்ந்து வந்தார். எந்த விதமான பிரதிபலனையும், எதிர்பாராமல் இயேசு கிறிஸ்து வின் மீது தனக்கிருந்த பற்றுதி வாழ்வை வெளிப்படுத்தினார். நன்மை செய்வது தர்மம் செய்வது போன்றவை இறைவன் தனக்குத் தந்த கட்டளை, மட்டுமல்ல, தனது கடமை என்பதையும் உணர்ந்து நிறைவேற்றினார்.

உன்னதம் வந்த தொள்தாள் பணியை நிறைவேற்றி உடல் நலம் குன்றி ஒரு நாள் இறந்து விட்டார் அங்கிருந்தோர் அவரது உடலைக் குளிப்பாட்டி மேல் மாடியில் வைத்திருந்தனர் யோப்பா நகருக்கு அருகிலுள்ள லித்தாவுக்கு பேதுரு வந்திருக்கிறார்



உன்னதம் வந்த தொள்தாள் பணியை நிறைவேற்றி உடல் நலம் குன்றி ஒரு நாள் இறந்து விட்டார் அங்கிருந்தோர் அவரது உடலைக் குளிப்பாட்டி மேல் மாடியில் வைத்திருந்தனர் யோப்பா நகருக்கு அருகிலுள்ள லித்தாவுக்கு பேதுரு வந்திருக்கிறார் என்பதை சபர்கள் கேள்விப்பட்டு இருவரை அவரிடம் அனுப்பி எங்களிடம் உடனடியாக வாருங்கள். என வருந்திக் கேட்டுக் கொண்மர்கள். பேதுருவும் புறப்பட்டு அவர்களோடு வந்தார். பேதுரு வந்ததும்

பலர் அங்குக. கூடிவந்தனர். குறிப்பாக கைம்பெண்கள் மலர் பேதுருவிடம் வந்து தொற்காள் தங்களோடு. இருந்தபோது தங்களுக்குச் செய்து கொடுத்த அங்கிகளையும் ஆடைக ளையும் அவரிடம் காண்பித்து அழுது புலம்பினர்



தங்களுக்கு நலன்கள் பல செய்த தொற்காள் எங்களுடன், இல்லையே என்ற மனவேதனையை வெளிப்படுத்தினர். பேதுரு சூழ்நிலையைத் தெளிவாக புரிந்து கொண்ட வராக அனைவரையும் வெளியே அனுப்பி விட்டு முழங்காற்படியிட்டு இறைவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினார் தொற்காளின் உடலின் பக்கமாய்த் திரும்பி 'தபித்தாளே எழுந்திரு' என்றார். அப்பொழுது தொற்காள் கண்களைத் திறந்து பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தார் (அப். 9:40), பேதுரு அவர் கையைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார்.

இறைமக்களையும் கைம் பெண்களையும் அழைத்து அவர்கள் முன் தொற்காளை உயிருள்ளவராக நிறுத்தினார். தொற்காள் உயிர்பெற்ற நிகழ்ச்சி மிக முக்கியமான ஒன்றாகும் . காரணம் என்னவென்றால், அப்போஸ்தலர் செய்த முதல் உயிர்ப்பு நிகழ்ச்சி இதுதான். இந்நிகழ்வு யோப்பா, பட்டணம் முழுவகம் பரவியது பலர் ஆண்டவரை விசுவாசித்து அவரை ஏற்றுக் கொள்வதற்கும் இந்நிகழ்வு காரணமாக அமைந்தது.

அன்பர்களே, தொற்காள் இறைவன் கொடுத்த தாலந்துகளை அடுத்தவர்கள் பயன் பெற பயன்படுத்தியது போல் நீங்களும் பிறனர். மகிழ்ச்சிக்காக உங்களை அர்ப்பணியுங்கள். இறைவனின் அதிசியமான நடத்துதல்களை பெற்று நீங்கள் அகம் மகிழலாம்

**அஜின்ஷா. செ**




## மரியா உட்வொர்த் எற்றார்

**(MARIA WOODWORTH ETTER)**

**(1844 – 1924)**

தொடர்ச்சி...........




**உபத்திரவங்களை சந்தித்தார்:** மரியாவின் கூட்டங்களில்சிலர் மன நோயாளிகளை கொண்டு வந்து அவரது ஊழியத்திற்கு களங்கம் கற்பிக்க முற்பட்டனர். இதனால் பல முறை காவல் துறை யினரால் மரியா விசாரணைக்கு அழைத்துச் செல்லப் பட்டார். பல நேரங்களில் கொலை மிரட்டல்களும் வந்த வண்ணம் இருந்தன. ஆனால் ஒன்றைக் குறித்தும் கவலைப் படாமல் தனது ஊழியங்களைத் திட்டமிட்டபடி அனுதினமும் செய்து முடித்து வந்தார். இந்த வேளையில் அவரது கணவர் உட்வொர்த் மரணமடைந்தார். இது இன்னும் அதிக நெருக்கடிகளை அவரது வாழ்வில் கொண்டு வந்தாலும் தேவனுடைய ஊழியத்தை மட்டும் தளராமல் செய்து வந்தார். ஏழு ஆண்டுகளுக்குப்பின் அவர் மேல் மிகவும் மரியாதையுடையவராகவும் அவரது ஊழியத்தில் உறு துணையாகவும் இருந்த சாமுவேல் எற்றார் (SAMUEL ETTER) என்பவரை திருமணம் செய்து கொண்டார். இது அவரது ஊழியத்திற்கு இன்னும் உறுதுணையாக அமைந்தது.

**எளிமையும் எழுப்புதலும் :** மரியா தோற்றத்தில் மிகவும் எளிமையானவர். உயர் கல்வி படித்தவரும் அல்ல. குதிரை வண்டிகளிலும், இரயில் வண்டிகளிலுமாக தேசமெங்கும் பிரயாணம் செய்தார். பணம் இல்லாத பல வேளைகளிலும், தங்குவதற்கு வசதி இல்லாத இடங்களிலும் ஏதேனும் ஒரு கூடாரத்தில் தங்குவார். ஆயினும் இந்த வசதி குறைவுகள் அவரை ஒரு போதும் சோர்வடைய செய்ததில்லை. எல்லா சமூகப் பிரிவினரும் அவருடைய வீட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

செல்வந்தர்கள் ஏழைகள் என எல்லோரையும் ஒன்று போல் நேசித்தார். அவருடைய ஊழியமோ பாவத்தின் மீதும் பிசாசின் மீதும் ஆவிக்கரிய மிக பயங்கர வல்லமையுள்ளதாய் காணப்பட்டது. அவருடைய பிரசங்கமானது ஆவியானவரின் வல்லமையை நமது வாழ்கையில் செயல் படுத்திக் காண்பிக்க வேண்டும் என்பதாயிருந்தது. அந்நாட்களில் அவர் டெக்சாஸ் (TEXAS) மற்றும் லாஸ்ஏஞ்சல்ஸ் (LOSANGELS) பட்டணங்களில் நடத்திய கூட்டங்கள் உலகையே அசைக்கும் வண்ணமாக அமைந்தது. அப்பட்டணங்கள் பெந்தேகோஸ்தே எழுப்புதலின் மையங்களாக மாறிவிட்டது. இயேசுவின் ஸ்தானாபதிகள், எல்லா வாதங்களையும், சண்டைகளையும், பிரிவினைகளையும் உண்டாக்குகிற எந்த கோட்பாடுகளையும் தத்துவங்களையும் உதறித் தள்ள வேண்டும் என்று கூறுவார். பெந்தேகோஸ்தே அனுபவமான பல பாஷை பேசுவதைத் தழுவிய தூய்மை இயக்கத்தின் முன்னோடி சுவிஷேசியாக மரியா திகழ்ந்தார். இவரது போதனைகளும் கோட்பாடுகளும் பெந்தேகோஸ்தே பிரிவுகள் தோன்றுவதற்கு வழி வகுத்தன.

**கூடார ஆராதனை :** 45 வருட ஊழியத்திற்குப் பிறகு மேற்கு இந்தியனப்பாலிஸ் (WEST INDIANAPOLIS) என்ற இடத்தில் 1916, மே 16ல் ஒரு ஆலயம் கட்டி கடைசி ஆறு ஆண்டுகள் ஊழியத்தை நிறை வேற்றினார். இது "கூடார ஆராதனை" என்று அழைக்கப் பட்டது.





இங்கு நடைபெற்ற ஆராதனைகள் தற்போதுள்ள பெந்தேகோஸ்தே ஆராதனை முறைக்கு முன்னோடியாக அமைந்தது. அந்நாட்களில் இருந்த பெரும் பேச்சாளர்கள் இந்த கூடார ஆலயத்தில் வந்து கூட்டங்கள் நடத்தினர். சகோ. ஸ்மித் விக்கிளிஸ்வொர்த் என்பவர் சகோதரி மரியாவின் ஊழியத்தின் சீஷன் என கருதப்படுகிறார். சகோதரி. மரியாவின் மரணத்திற்குப் (1924) பின் 1925 ல் இக்கூடார ஆலயத்தில் பல தொடர் கூட்டங்களை இவர் நடத்தினார்.

**இயேசுவுக்காக கரைந்து போன வாழ்விலும் உறுதி :** கர்த்தருடைய வீட்டிற்குச் செல்லு முன் தனது இரண்டு கணவர்களையும் ஆறு பிள்ளைகளையும் அடக்கம் செய்தார். 60 வயதான ஒரே மகள் லிசியின் அடக்க ஆராதனையில் அவரது கல்லறைக்குள் நோக்காமல் தேவனிடம் நம்பிக்கை வைத்து பரலோகத்ததை நோக்கிப் பார்க்கும் படி மக்களை ஊக்கப்படுத்தினார். சகோதரி எற்றார் உபத்திரவத்தின் மத்தியிலும் அழுத்தத்தின் மத்தியிலும் தனது வாழ்நாள் முழுவதும் தேவனின் முழு ஆலோசனைக்கும் உண்மையுள்ளவராக இருந்தார். எப்போதுமே பூக்கள் வாடாமல் விரிந்திருக்கும் இடத்தில் விரைவில் நான் இருப்பேன்" எனக் கூறினார். "நான் துருப்பிடித்து மாய்வதை விட இயேசுவுக்காக விரைவில் கரைந்து போவேன்" என்று கூறுவார். சகோதரி ஏற்றார் தனது 80 வது வயதில் இரைப்பை கோளாறினால் பாதிக்கப்பட்டார். 1924 ஆம் ஆண்டு மே மாதம் எந்த கஷ்டமும் இல்லாமல் மெதுவாக ஆழ்ந்த நித்திரைக்குள் மூழ்கி தனது முடிவை சந்தித்தார். இவர் இன்றும் "பெந்தேகோஸ்தே எழுப்பதலின் தாய்" (GRAND MOTHER OF THE PENTECOSTAL MOVEMENT) என அழைக்கப்படுகிறார்.

*ARTICLE BY*

M.NESAMONY & FAMILY




# JUNIOR B

PRAY FOR OTHERS BEFORE PRAYING FOR YOURSELF………




ERIC AARON




ELFINA




JEREMIAH ALAN

Teacher : MRS. JEYANTHA JOHN

# JUNE

## Congratulations

| KIDS COLOURING | CODE WORD | WORD SEARCH | CROSS WORD | BIBLE QUIZ |
| --- | --- | --- | --- | --- |
| Smyrna Syntche | Jania Preni | Sherin Shah | Roshan | Roshan |
| Jania Preni | Johan Sanjo | Johan Sanjo | Johan Sanjo | Joshua |
| Johan Sanjo | Hazel Hartlyn | Roshan | Sherin Shah | |
| Hazel Hartlyn | Kariss Angelo | Eric Aaron | Eric Aaron | |
| Reagan Shan | Sherin Shah | Jason Eric | Joshua | |
| Kariss Angelo | Jason Eric | | | |
| Chris Gabiriel | | | | |

**Well Done!**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.



# Revelation 1-10

## வெளிப்படுத்தின விசேஷம் 1–10

JULY '22 - QUESTIONS

*1.* எந்தக் கரங்களில் ஏழு நட்சத்திரம் ஏந்திக் கொண்டிருந்தார்?

2. யாருடைய போதகத்தை கை கொள்பவர்கள் வெறுக்கப்பட்டவர்கள்?

3. யாரை சாத்தானுடைய கூட்டத்தார் என்று சொல்லப்பட்டது?

*4.* எத்தனை மூப்பர்கள் சிங்காசனத்தில் இருந்தார்கள்?

5. யாருடைய கரத்திலிருந்து புஸ்தகம் வாங்கப்பட்டது?


6. எந்த முத்திரை உடைக்கப்பட்ட போது கொல்லப்பட்ட ஆத்துமா பலி ... னப்பட்டது?

7. இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் எத்தனை பேர்?

8. நான்காம் தூதன் எக்காலம் ஊதிய போது என்ன நடந்தது?

*9.* குதிரை சேனை இராணுவங்களின் தொகை என்ன?

*10.* எத்தனை இடிகள் சத்தமிட்டன?




### ஜீன்-2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. 1 யோ:1:10 | 2. 1 யோ:2:9 | 3. 1 யோ:2:15 | 4. 1 யோ: 2:22 | 5. 1 யோ:3:4 | 6. 1 யோ: 3:18. | 7. 1யோ:4:8 | 8. 1யோ: 5:12 | 9. 2 யோ:1:10 | 10. 3 யோ:1:12

திருமதி. ஜோனிஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம் திருமதி.ஜமுணா ராணி, திருமதி. பமீலா டேனியல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷைரின்ஷா

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348


# KIDS COLOURING



PRIMARY

# Jesus Feeds 5,000

Help Jesus get to the bread and fish





# JESUS FEEDS 5000

Discover the hidden words.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | M | L | C | A | I | L | G | D | T | R | Q | V | I | L |
| G | R | J | W | O | F | T | E | V | X | H | J | L | S | F |
| A | S | E | P | V | I | G | Z | F | F | B | R | L | U | P |
| R | D | D | A | N | S | D | E | T | T | Q | I | X | M | K |
| T | E | A | T | D | H | G | E | T | M | O | X | L | J | H |
| Y | W | R | S | X | C | A | Z | H | J | C | V | D | S | M |
| E | R | E | U | E | C | V | H | B | I | C | X | E | G | B |
| L | Q | M | L | H | L | B | A | S | K | E | T | S | R | Z |
| R | M | N | I | V | F | P | G | O | D | M | K | L | G | S |
| A | X | N | N | O | E | Y | I | M | J | D | P | C | Q | A |
| B | G | H | O | O | D | F | T | C | E | H | U | Y | D | H |
| R | C | D | I | V | V | O | T | Q | S | N | J | X | R | C |
| N | Q | Z | Y | G | D | N | H | O | G | I | L | B | B | W |
| O | B | C | U | A | G | A | T | G | Q | V | D | O | E | U |
| X | X | Q | K | J | E | S | U | S | G | R | E | G | P | L |

**Word Bank**


FOOD
BASKETS
TWELVE
JESUS
GOD
DISCIPLES
LEFTOVERS
BARLEY
BREAD
EAT
FISH
TEACHING

JUNIOR

QUIZ!

SENIOR
& above

# Jesus Feeds the 5000



Jesus then took the loaves, gave thanks, and distributed to those who were seated as much as they wanted. He did the same with the fish. John 6:11 (NIV)

Match the words in the box with the correct definition.

1. ____________ A large number of persons gathered together
2. ____________ Human beings -- as a group
3. ____________ A cold-blooded animal with fins and gills that lives in water
4. ____________ The number equal to 6 plus 6
5. ____________ Opposite of large
6. ____________ Bread baked in one long piece (plural)
7. ____________ A male child
8. ____________ A container made of woven materials such as straw or twigs

| | | | |
|---|---|---|---|
| crowd | loaves | boy | basket |
| people | small | fish | twelve |




# How it Works




**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



**THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).**
**COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.**

# Happy Birthday!

| | |
|---|---|
| 01-JUL | MR. A.RAVICHANDRAN |
| 04-JUL | MSTR. A. ERIC AARON |
| 05-JUL | MR.P.DAVID RAJ |
| 05-JUL | MR. THANU LINGAM |
| 05-JUL | MRS. JESSY BEULA JOHN JOSEPH |
| 05-JUL | MR. JOSHUVA KOSHY |
| 05-JUL | BABY. ISABELLA JANE |
| 07-JUL | MRS. HEPSI BAI NESAMONY |
| 08-JUL | MRS. AMALA CHARLES |
| 09-JUL | MRS. GOLDA JENCY STANLY |
| 10-JUL | MSTR. ERIC JAYDEN |
| 11-JUL | BABY. ELIANNA KACY |
| 11-JUL | MSTR. AISHLIN BABU |
| 13-JUL | MRS. PAMELA RACHEL DANIEL |
| 13-JUL | MR. BHASKAR RAJARAM |
| 14-JUL | MR. JASON SAMUEL |
| 15-JUL | MR. SANKARAN CHINNIYAN |
| 18-JUL | MS.S. ROOTH RADHIKA |
| 19-JUL | MRS. SANGEETHA UJIN RAJ |
| 23-JUL | MR. RAVINDRA |
| 25-JUL | MRS. ANGELIN NALINI |
| 25-JUL | MR. TIMOTHEUS DILL SURESH |
| 26-JUL | MRS. ROSELIN TAMIL SELVI |
| 28-JUL | MRS. BEETA CHRISTOPHER |
| 28-JUL | MR. DAVID SORNABALAN |
| 29-JUL | MR. DENNIS ROGER |
| 29-JUL | MR. MERVIN SAMUEL |
| 29-JUL | BABY. JANIA PRENI |
| 30-JUL | MS. BERNICIA LEENUS OBED |
| 31-JUL | MR. KINGSLY STOOBERT |
| 31-JUL | MRS. BIJI KUMARI.G.S |
| 31-JUL | MRS. SUJATHA MOHANAKUMAR |

# Happy Anniversary

| | |
|---|---|
| 02-JUL | LEENUS PATRICK OBED<br>ISWARYA OBED |
| 03-JUL | MR. ASHOK KUMAR &<br>MRS. PHILOMINA |
| 04-JUL | MR. A.S KANNAN &<br>MRS. LAVANYA |
| 05-JUL | MR. SAMAN RAJKUMAR &<br>MRS. CECILIYA |
| 06-JUL | ARUNKUMAR<br>S.BANU PRIYA |
| 08-JUL | MR. GEORGE ROSE &<br>MRS. ANITHA |
| 12-JUL | MR. DAVID LIVINGSTON &<br>MRS. BEULA RANI |
| 25-JUL | MR. SANKARAN CHINNIYAN &<br>MRS. KALYANI |

# July




MRS.SHALY MELBIN

MRS.AGUSTA LAWRENCE







MRS. ROSELIN BALAJI

# WINNERS

BIBLE QUIZ- ISSAIAH

GET READY

CHAMPS FOR CHRIST

COMPETE • CONQUER • CELEBRATE

September 2022

# CHAMP FOR CHRIST 2022

EVENTS

- Memory Verse
- Singing
- Fancy Dress
- Story Telling



தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

